**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.274/2021**
**Prosecution Witnesses: 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **வினோத்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **கவிராஜ்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(01.09.2025)**
**முதல் விசாரணை**

நான் கீழஉரப்பனுரில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக்காக பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன கவின் என்பவர் எனது உடன்பிறந்த அண்ணன் ஆவார். கடந்த 06.01.2021 அன்று மாலை 6 மணியளவில் எனது அண்ணன் கவின் வேலைக்காக செல்வதற்காக எனது தாத்தா மைக்கண்ணனிடம் சொல்லிவிட்டு சென்றார். அதன் பின்பு 07.01.2021 அன்று அதிகாலை 2 மணியளவில் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் இருந்து எனது தாத்தாவிற்கு போன் செய்து எனது அண்ணன் கவின் வாகன விபத்தில் இறந்துவிட்டதாக கூறியதை எனது தாத்தா என்னிடம் கூறி நானும் எனது தாத்தாவும் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு சென்று பார்த்த போது அதே விபத்தில் சிலம்பரசன் என்பவரும் இறந்துவிட்டார் என தெரியவந்தது. கப்பலூர் டோல்கேட் அருகே உள்ள ஐ.ஓ.சி நிறுவனம் அருகே விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். கவினும் சிலம்பரசனும் ஆஜர் எதிரியுடன் அசோக் லேலேண்ட் வாகனத்தில் சென்ற போது மேற்கூறிய சம்பவயிடத்தில் முன்னால் சென்ற பாரத் பென்ஸ் லாரி மீது ஆஜர் எதிரி மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். மேற்கண்ட விபத்தில்

ஆஜர் எதிரிக்கும் காயம் ஏற்பட்டு இருந்தது. விபத்து சம்பந்தமாக எனது தாத்தா புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நடந்த சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வெற்றிவேல் என்பவர் யார் என்று தெரியாது. வழக்கில் இறந்துபோனவர் எனது அண்ணன் என்பதால் எனது அண்ணனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.